கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

இரண்டாம் வருட/முதலாம் அரையாண்டு சிறப்புக்கலைமாணித் தேர்வு – 2016/2017 (மார்ச்/ஏப்ரல் 2019)

# DTS 2123 Dance and Music for Theatre

நேரம் : 02 மணித்தியாலங்கள்

பகுதி–I இல் இருந்து இரு வினாக்களுக்கும் பகுதி–II இல் இருந்து இரு வினாக்களுக்குமாக மொத்தம் நான்கு வினாக்களுக்கு விடை தருக.

## பகுதி – I

01. "நாடகத்தில் இசைப் பிரயோகம் தொடர்பாக" பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

(அ) இசை என்றால் என்ன? சிறு விளக்கம் தருக. (05 புள்ளிகள்)

(ஆ) நாடகத்தில் வரும் இசை வகைகளைக் குறிப்பிடுக. (05 புள்ளிகள்)

(இ) நாடக இசை வெளிப்படுத்துகையில் நாடகக் கதை ஓட்டத்தை நகர்த்திச் செல்லும் விதம் தொடர்பாக கருத்துரைக்குக. (10 புள்ளிகள்)

02. "நாடகத்திற்கான குரல் பயிற்சியினை மனங்கொண்டு" கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.

(அ) குரல் உற்பத்தியின் வகைப்பாடுகளினைத் தந்து விளக்குக. (05 புள்ளிகள்)

(ஆ) குரலைச் செம்மையாக்கச் செய்யும் பயிற்சிகள் ஐந்தினைக் குறிப்பிடுக. (05 புள்ளிகள்)

(இ) பின்னூட்டு இசை வழங்கல் என்றால் என்ன? உதாரணங்களோடு விளக்குக. (10 புள்ளிகள்)

03. "இசையே நாடகத்தின் கருவூலமாகும்" மேற்படி கூற்றின் பொருத்தப்பாட்டினை கீழ்வரும் வினாக்கள் ஊடாக தெளிவுபடுத்துக.

(அ) நாடகத்தில் கரு இசை என்றால் என்ன? உதாரணங்களுடன் விளக்குக. (10 புள்ளிகள்)

(ஆ) சிறுவர் நாடகத்தில் இசை பெறும் முக்கியத்துவத்தினை விளக்குக. (10 புள்ளிகள்)

## பகுதி – II

04. நாட்டார் இசையை சிறுவர் நாடகப் படைப்பாக்கம் ஒன்றிற்கு எவ்வாறு பிரயோகம் செய்வீர்? உமது பயிற்சி அனுபவத்தினூடாக கருத்துரைக்குக.
(30 புள்ளிகள்)

05. நாடகத்திற்கு நடனங்களை (Dance) பிரயோகிக்கும்போது நெறியாளரென உம்மைக் கருதி அதன் உத்தி முறைகள் தொடர்பாக விளக்கத்தை முன்வைக்குக.
(30 புள்ளிகள்)

06. நாட்டார் நடன அசைவுகளை நவீன நாடக அசைவுகளுக்குப் பாவிக்க முடியுமா? உமது மனப் பதிவினை தெளிவுபடுத்துக.
(30 புள்ளிகள்)

*****